**Gampaha Wickramarachchi University of Indigenous Medicine, Sri Lanka**
**கம்பஹா விக்ரமாராச்சி சுதேச மருத்துவப் பல்கலைக்கழகம், இலங்கை**

# வெற்றிடங்கள்

# திறந்த விண்ணப்பங்கள் கோரல்

கம்பஹா விக்கிரமாராச்சி சுதேச மருத்துவப் பல்கலைக்கழகத்தில் பின்வரும் பதவிகளுக்கு தகுதியான விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கான வழிமுறைகள்**

1. விண்ணப்பங்களை இணையவழி முறைமை **(online application portal)** மூலம் மட்டுமே சமர்ப்பிக்க வேண்டும் என்பதுடன் விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதற்கான இணையவழி இணைப்பு gwu.ac.lk இணையதளத்தில் **Vacancies** இன் கீழ் கிடைக்கிறது. இணையவழி விண்ணப்பப் படிவத்தின் மூலம் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தின் பிரதியினை பதிவிறக்கம் **(Download)** செய்து, விண்ணப்பதாரர் கையொப்பமிட்டு, 2026.03.05 அன்று அல்லது அதற்கு முன்னர் **உதவிப் பதிவாளர், கல்விசாரா தாபனப்பிரிவு, கம்பஹா விக்ரமாராச்சி சுதேச மருத்துவப் பல்கலைக்கழகம், கண்டி வீதி, யக்கல** என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

2. இணையத்தளத்தில் வழங்கப்பட்டுள்ள **online application portal** இற்கு பிரவேசிப்பதற்கு முன்னர், இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ள விளம்பரத்தில் கோரப்பட்ட அனைத்து ஆவணங்களின் மென் நகல்களையும் **(Softcopy)** நீங்கள் தயாரித்து, **GWUIM RMS User Guide** இல் வழங்கப்பட்ட வழிமுறைகளைப் பின்பற்றி உங்கள் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க வேண்டும்.

3. விண்ணப்பதாரர்கள் மீளப்பெற முடியாத விண்ணப்பம் மற்றும் பரீட்சைக் கட்டணமாக ரூ. 750.00 செலுத்த வேண்டும். இதனை **333-1001-1-0000059** (மக்கள் வங்கி, யக்கல) என்ற கணக்கு இலக்கத்திற்கு வரவு வைக்கப்படல் வேண்டும், மேலும் தொடர்புடைய கொடுப்பனவுச் சிட்டையின் மென் பிரதியினை நிகழ்நிலை நடைமுறையின்படி பதிவேற்றுதல் **(upload)** வேண்டும். மூலப்பிரதியினை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

4. நிகழ்நிலை மூலம் விண்ணப்பம் சமர்ப்பிப்பதற்கான தொகுதி **(online application portal)** **2026.02.16** முதல் **2026.03.05** வரை திறந்திருக்கும். தொழில்நுட்ப பிரச்சனைகள் அல்லது விசாரணைகள் ஏதுமிருப்பின் 0778656171 அல்லது 0332222748 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு (கடமை நாட்களில் முற்பகல் 8.30 மணி முதல் பிற்பகல் 4.00 மணி வரை) அழைப்பினை ஏற்படுத்தலாம்.

5. விண்ணப்பம் அடங்கிய கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் விண்ணப்பிக்கும் பதவியினைத் தெளிவாகக் குறிப்பிடுதல் அவசியமானது.

6. தேவையான விவரங்கள் இல்லாத, தெளிவற்ற, தகுதிகளை நிரூபிக்க தொடர்புடைய சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளை இணைக்காத, பணம் செலுத்தியதற்கான கொடுப்பனவுச் சிட்டையை இணைக்காத, மற்றும் முடிவுத்திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் அல்லது வேறு ஏதாவது தேவையை பூர்த்தி செய்யாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். நிராகரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவம் எக்காரணம் கொண்டும் மறுபரிசீலனை செய்யப்பட மாட்டாது.

## 1. மருந்தாளர் (தாழ் தரம்)

**தேவையான தகைமைகள்** : இலங்கை மருத்துவ சபையால் (Sri Lanka Medical Council) தகுதிவாய்ந்த மருந்தாளராக அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழை வைத்திருத்தல் வேண்டும்.

**சம்பள அளவுத்திட்டம்** : **U-MT 1 (III) - ரூபா. 51,095-7X540;10X640-60,575 (மாதாந்தம்)**
((முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இல. 06/2025 மற்றும் ஆணைக்குழு சுற்றறிக்கை இல. 02/2025(i) ஆகியவற்றின் பிரகாரம் சம்பளம் வழங்கப்படும்)

**ஆட்சேர்ப்பு முறைமை** : நேர்முகத்தேர்வு மூலம்

**வயது** : 18 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்

## 2. தொழில்நுட்ப அலுவலர் (தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம்) தரம் III

**தேவையான தகைமைகள்:**

(அ) க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் ஏதேனும் ஒரு பாடப்பிரிவின் கீழ் ஒரே தடவையில் மூன்று (03) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

மற்றும்

(ஆ) தகவல் தொடர்பு மற்றும் பல்லூடகத்தொழில்நுட்பம் / தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் / தகவல் தொழில்நுட்பம் அல்லது அதுபோன்ற துறையில், மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப / தொழிற்பயிற்சி நிறுவனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் வழங்கிய, தேசிய தொழிற்கல்வி தகுதி நிலை 5 (N.V.Q. Level 5) அல்லது அதற்கு சமமான நிலைக்குக் குறையாத அளவில் தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல் வேண்டும்.

- தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தில் சேவை முன் அனுபவம் உள்ள விண்ணப்பதாரர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

❖ மேற்குறிப்பிடப்பட்ட தகைமைகளுக்கு மேலதிகமாக, விண்ணப்பதாரர்கள் பின்வரும் குறிப்பிட்ட தகுதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்:

- இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்
- வயது 18 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.
- நல்லொழுக்கமுடையவராக இருத்தல் வேண்டும்.

சம்பள அளவுத்திட்டம் :UMT 1 (III) - ரூபா. 51,095-7X540;10X640-60,575 (மாதாந்தம்)
(முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இல. 06/2025 மற்றும் ஆணைக்குழு சுற்றறிக்கை இல. 02/2025(i) ஆகியவற்றின் பிரகாரம் சம்பளம் வழங்கப்படும்)

ஆட்சேர்ப்பு முறைமை :எழுத்து மற்றும் / அல்லது செயன்முறைப் பரீட்சை மற்றும் நேர்முகத்தேர்வு மூலம்

## 3. முகாமைத்துவ உதவியாளர் (களஞ்சியக் காப்பாளர்) தரம் III

**தேவையான தகைமைகள்:**

1. க.பொ.த. (சா/த) பரீட்சையில் ஒரே அமர்வில் பின்வரும் பாடங்களில் சிறப்புத் தேர்ச்சியுடன் 06 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.
   (i) சிங்கள மொழி / தமிழ்மொழி
   (ii) ஆங்கில மொழி / ஆங்கில இலக்கியம்
   (iii) கணிதம்

   மற்றும்

2. க.பொ.த (உ/த) பரீட்சையில் அனைத்துப் பாடங்களிலும் ஒரே அமர்வில் தேர்ச்சி பெற்றிருத்தல் (சாதாரண பொதுப் பரீட்சை வினாத்தாள் தவிர).

**பின்வரும் தகுதிகளைப் பூர்த்தி செய்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.**

(அ) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திலிருந்து பெறப்பட்ட 06 மாதங்களுக்குக் குறையாத கணினி பயன்பாடுகளைப் பயன்படுத்துவதில் ஏற்றுக்கொள்ளக்கூடிய தகைமையைப் பெற்றிருக்க வேண்டும்.

மற்றும்

(ஆ) கணினிப் பயன்பாட்டு தொகுப்புகளைப் பயன்படுத்துவதில் இரண்டு (02) வருட அனுபவம் கொண்டிருத்தல்.

**இந்தப் பதவிக்கு உரிய விசேட தகுதிகள்**

மேலே பட்டியலிடப்பட்டுள்ள தகுதிகளுக்கு மேலதிகமாக, விண்ணப்பதாரர்கள் முகாமைத்துவ உதவியாளர் (களஞ்சியக் காப்பாளர்) பதவிக்கு உரிய பின்வரும் தகுதிகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்:

களஞ்சியத்துறையில் குறைந்தபட்சம் ஒரு வருட அனுபவம் மற்றும் / அல்லது க.பொ.த (சா.த) பரீட்சையில் வர்த்தகத்தில் சித்தி அல்லது க.பொ.த. (உ/த) பரீட்சையில் கணக்கியலில் சித்தி அடைந்திருத்தல்.

**குறிப்பு** :- தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் பல்கலைக்கழகத்தால் நிர்ணயிக்கப்படும் பாதுகாப்பு வைப்புத்தொகையை (Security Deposit) செலுத்துதல் வேண்டும்.

| | |
|---|---|
| **சம்பள அளவுத்திட்டம்** | **:UMN 1 (III) - ரூபா. 49,475 – 17x540 – 58,655 (மாதாந்தம்)**<br>(முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இல. 06/2025 மற்றும் ஆணைக்குழு சுற்றறிக்கை இல. 02/2025(i) ஆகியவற்றின் பிரகாரம் சம்பளம் வழங்கப்படும்) |
| **ஆட்சேர்ப்பு முறைமை** | :எழுத்துப் பரீட்சை (75 புள்ளிகள்) மற்றும் நேர்முகத்தேர்வு (25 புள்ளிகள்) மூலம் |

எழுத்துப்பரீட்சையில் பின்வரும் விடயங்கள் அடங்கியிருக்கும்.

- சிங்களம் / தமிழ் மற்றும் ஆங்கில மொழி அறிவு
- நுண்ணறிவு மற்றும் பொது அறிவு
- கணணி அறிவு
- விடயம் சார் அறிவு

மேற்குறிப்பிடப்பட்ட தகுதிகளுக்கு மேலதிகமாக, விண்ணப்பதாரர்கள் பின்வரும் தகுதிகளைக் கொண்டிருக்க வேண்டும்:

- இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்
- 18 வயதுக்குக் குறையாமலும் 30 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்
- நல்லொழுக்கமுடையவராக இருத்தல் வேண்டும்.

## 4. முகாமைத்துவ உதவியாளர் (கணக்குப் பதிவாளர்) தரம் III

**தேவையான தகைமைகள்:**

1. க.பொ.த. (சா/த) பரீட்சையில் ஒரே அமர்வில் பின்வரும் பாடங்களில் சிறப்புத் தேர்ச்சியுடன் 06 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.
   (i) சிங்கள மொழி / தமிழ்மொழி
   (ii) ஆங்கில மொழி / ஆங்கில இலக்கியம்
   (iii) கணிதம்

   மற்றும்

2. க.பொ.த (உ/த) பரீட்சையில் அனைத்துப் பாடங்களிலும் ஒரே அமர்வில் தேர்ச்சி பெற்றிருத்தல் (சாதாரண பொதுப் பரீட்சை வினாத்தாள் தவிர).

**பின்வரும் தகுதிகளைப் பூர்த்தி செய்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.**

(அ) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திலிருந்து பெறப்பட்ட 06 மாதங்களுக்குக் குறையாத கணினி பயன்பாடுகளைப் பயன்படுத்துவதில் ஏற்றுக்கொள்ளக்கூடிய தகைமையைப் பெற்றிருக்க வேண்டும்.

மற்றும்

(ஆ) கணினிப் பயன்பாட்டு தொகுப்புகளைப் பயன்படுத்துவதில் இரண்டு (02) வருட அனுபவம் கொண்டிருத்தல்.

**இந்தப் பதவிக்கு உரிய விசேட தகுதிகள்**

(அ) திறன் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சின் கீழ் உள்ள ஒரு தொழில்நுட்பக் கல்லூரியிலிருந்து அல்லது இலங்கை தொழில்நுட்பக் கல்லூரியிலிருந்து பெறப்பட்ட கணக்கியலில் தேசிய சான்றிதழைப் பெற்றிருத்தல் அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தால் வழங்கப்படும் சமமான தகுதியினைக் கொண்டிருத்தல்.

அல்லது,

(ஆ) வர்த்தகப் பிரிவில் க.பொ.த. (உ/த) பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**சம்பள அளவுத்திட்டம்** : **UMN 1 (III) - ரூபா. 49,475 – 17x540 – 58,655 (மாதாந்தம்)**
((முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இல. 06/2025 மற்றும் ஆணைக்குழு சுற்றறிக்கை இல. 02/2025(i) ஆகியவற்றின் பிரகாரம் சம்பளம் வழங்கப்படும்)

**ஆட்சேர்ப்பு முறைமை** :எழுத்துப் பரீட்சை (75 புள்ளிகள்) மற்றும் நேர்முகத்தேர்வு (25 புள்ளிகள்) மூலம்

எழுத்துப் பரீட்சையில் பின்வரும் விடயங்கள் அடங்கியிருக்கும்.

- சிங்களம் / தமிழ் மற்றும் ஆங்கில மொழி அறிவு
- நுண்ணறிவு மற்றும் பொது அறிவு
- கணணி அறிவு
- விடயம் சார் அறிவு

மேற்குறிப்பிடப்பட்ட தகுதிகளுக்கு மேலதிகமாக, விண்ணப்பதாரர்கள் பின்வரும் தகுதிகளைக் கொண்டிருக்க வேண்டும்:

- இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்
- 18 வயதுக்குக் குறையாமலும் 30 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்
- நல்லொழுக்கமுடையவராக இருத்தல் வேண்டும்.

## 5. <u>பாதுகாப்பு பரிசோதகர் தரம் II</u>

**தேவையான தகைமைகள்:**

1. அ). க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் இரண்டு முறைக்கு மேற்படாமல் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும். சிங்கள மொழி / தமிழ் மொழி அல்லது இலக்கியம் மற்றும் கணிதம் உட்பட 05 பாடங்களில் சிறப்புத் தேர்ச்சிகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.
2. பொலிஸ் அல்லது இராணுவ சேவையில் அல்லது பல்கலைக்கழக முறைமை பாதுகாப்பு சேவையில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட பாதுகாப்பு சேவையில் குறைந்தது 5 ஆண்டுகள் திருப்திகரமான சேவையை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

3. விளையாட்டு நடவடிக்கைகளில் ஊக்கத்துடன் பங்கேற்றிருத்தல் வேண்டும்.
4. உயரம் - 5 அடி 4 அங்குலத்திற்கு குறையாதிருத்தல் வேண்டும்.
5. மார்பளவு - 34 அங்குலத்திற்கு குறையாதிருத்தல் வேண்டும்.
6. வயதெல்லை 18 வயதுக்கு குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**சம்பள அளவுத்திட்டம்** : **UMN 1 (III) - ரூபா. 49,475 – 17x540 – 58,655 (மாதாந்தம்)**
(முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இல. 06/2025 மற்றும் ஆணைக்குழு சுற்றறிக்கை இல. 02/2025(i) ஆகியவற்றின் பிரகாரம் சம்பளம் வழங்கப்படும்)

**ஆட்சேர்ப்பு முறைமை** : நேர்முகத்தேர்வு மூலம்

**6. <u>சாரதி தரம் III</u>**

**தேவையான தகைமைகள்:**

1. அ) க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் இரண்டு முறைக்கு மேற்படாமல் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும் மற்றும் அவற்றுள் 02 சிறப்புத் தேர்ச்சிகளைப் பெற்றிருக்க வேண்டும்.

மற்றும்

ஆ) மோட்டார் வாகன ஆணையாளர் நாயகத்தால் வழங்கப்பட்ட கனரக வாகனங்களுக்கான சாரதி அனுமதிப் பத்திரத்தினை வைத்திருத்தல் மற்றும் மேற்படி அனுமதிப் பத்திரத்தினைப் பெற்ற பின்னர் குறைந்தபட்சம் (03) ஆண்டுகள் சாரதி அனுபவத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**வயது** :18 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்

- **அனைத்து விண்ணப்பதாரர்களும்,**
  (i) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
  (ii) பதவியின் கடமைகளைச் செய்வதற்கும் நாட்டின் எந்தப் பகுதியிலும் பணியாற்றுவதற்கும் உடல் ரீதியாகவும் மன ரீதியாகவும் தகுதியானவராக இருத்தல் வேண்டும்.
  (iii) சிறந்த நடத்தை கொண்டவராக இருத்தல் வேண்டும்.

**சம்பள அளவுத்திட்டம்** :**U-PL 3 (III) ரூபா. 48,005 – 16 x 490 – 55,845 (மாதாந்தம்)**
(முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இல. 06/2025 மற்றும் ஆணைக்குழு சுற்றறிக்கை இல. 02/2025(i) ஆகியவற்றின் பிரகாரம் சம்பளம் வழங்கப்படும்)

**ஆட்சேர்ப்பு முறைமை** :கட்டமைக்கப்பட்ட நேர்முகத்தேர்வு மற்றும் தொழில்முறைப் பரீட்சை மூலம்.

## 7. மின்னியலாளர் தரம் III

**தேவையான தகைமைகள்:**

1 மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப / தொழில் பயிற்சி தகுதி நிறுவனத்தால் வழங்கப்பட்ட தேசிய தொழிற்கல்வி தகுதி (NVQ) நிலை 4 க்குக் குறையாத தேர்ச்சிச் சான்றிதழை வைத்திருத்தல் வேண்டும். (பாடநெறியுடன் தொடர்புடைய தேசிய தொழிற்கல்வி தகுதி (N.V.Q.) நிலையை உறுதிப்படுத்த மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழவினால் வழங்கப்பட்ட சமமான சான்றிதழை (Certificate of Equivalence) சமர்ப்பித்தல் வேண்டும்.

**வயது** : 18 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்

அனைத்து விண்ணப்பதாரர்களும்,

(i) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ii) பதவியின் கடமைகளைச் செய்வதற்கும் நாட்டின் எந்தப் பகுதியிலும் பணியாற்றுவதற்கும் உடல் ரீதியாகவும் மன ரீதியாகவும் தகுதியானவராக இருத்தல் வேண்டும்.

(iii) சிறந்த நடத்தை கொண்டவராக இருத்தல் வேண்டும்.

**சம்பள அளவுத்திட்டம்** : **U-PL 3 (III) ரூபா. 48,005 – 16 x 490 – 55,845 (மாதாந்தம்)**
(முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இல. 06/2025 மற்றும் ஆணைக்குழு சுற்றறிக்கை இல. 02/2025(i) ஆகியவற்றின் பிரகாரம் சம்பளம் வழங்கப்படும்)

**ஆட்சேர்ப்பு முறைமை** : தொழில்முறைப் பரீட்சை மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகத்தேர்வு மூலம்.

பி.ஏ.என். கிரிஷாந்த
பதிவாளர்
12.02.2026